செய்தி வெளியீடு எண்: 1009 நாள் 09.05.2025

**❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி,**

- **கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த சிறுவன் கீர்த்தி வர்மாவிற்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மூலம் உரிய சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

**–மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தகவல்**

******

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (09.05.2025) சென்னை, தலைமை செயலகத்தில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஜீனூர் கிராமத்தைச் சேர்ந்த 17வயது சிறுவன் திரு.கீர்த்திவர்மா என்பவர் சிறுவயதில் மின்சாரம் தாக்கி தனது இரண்டு கைகளுமின்றி தற்போது 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 471 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றிருக்கிறார். இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அச்சிறுவன் வைத்த கோரிக்கையின்பேரில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்காக சிறப்பு மருத்துவ குழுவை வரவைத்து ஆலோசனை மேற்கொண்டு, உரிய சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைக்கு ஒரு செய்தியினை வெளியிட்டிருந்தார்கள். கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனபள்ளி பிளாக், ஜீனூர் கிராமத்தைச் சேர்ந்த 17 வயது சிறுவன் கீர்த்தி வர்மா என்பவர் தன்னுடைய இரு கைகளை இழந்த நிலையில் 12ஆம் வகுப்புக்கான தேர்வு எழுதி நேற்று காலை வெளியிடப்பட்ட தேர்வு முடிவுகளில் 600க்கு 471 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி மிகப் பெரிய அளவிலான சாதனை படைத்திருக்கிறார். இரு கைகள் இல்லை என்றாலும் கூட, அவருடைய உள் வலிமை வாழ்க்கையில் எப்படியாவது சாதித்து வாழ வேண்டும் என்கின்ற திறமை ஆற்றல் இன்றைக்கு 471 மதிப்பெண்களுடன் மிகப் பெரிய அளவிலான வெற்றியைப் பெற்று தொலைக்காட்சிகள் மூலமும், சமூக வலைத்தளம் மூலமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். தமிழ்நாட்டில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் தொடர் வெற்றியைப் பெற்றிருக்கும்

நிலையில், உறுப்பு மாற்று தானத்திற்கு மிகப் பெரிய அளவிலான வரவேற்பும், பெரிய அளவிலான வழிகாட்டுதலும் தமிழ்நாட்டில் இருந்துக் கொண்டிருக்கின்ற நிலையில், இதனை அறிந்த சிறுவன் கீர்த்தி வர்மா என்னுடைய இரு கைகளையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உறுப்பு மாற்று சிகிச்சையின் வாயிலாக கைகளை பொறுத்தி தர வேண்டும் என்கின்ற வகையிலான கோரிக்கையினை வைத்தார்கள். உடனடியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அவருடைய கோரிக்கையினை ஏற்று, பல்வேறு நடவடிக்கைகள் நேற்றைக்கு மேற்கொள்ளப்பட்டது. உடனடியாக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட சுகாதார அலுவலர் அவர்கள் ஆகியோர் இந்த சிறுவனின் கிராமத்திற்குச் சென்று அவருடைய தேவைகள் குறித்து கேட்டறிந்து, அரசின் சார்பில் அவர்களுக்கு பல்வேறு வகைகளில் உறுதுணையாக இருப்போம் என்கின்ற தகவலினை தெரிவித்திருக்கிறார்கள். அந்தவகையில் நேற்றைக்கு நானும், கிருஷ்ணகிரி மாவட்ட சுகாதார அலுவலர்களை நேரில் தொடர்பு கொண்டு, அந்த சிறுவனின் வீட்டிற்கு சென்று சிறுவனிடமும், சிறுவனின் தாயாரிடமும் பேசினேன். அந்த சிறுவனிடம் செயற்கை கைகளை அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய செயற்கை கைகள் வருகின்றது, ஒன்று இந்தியாவில் தயாரிக்கின்ற கைகளாக இருந்தாலும் சரி அல்லது வெளிநாட்டில் தயாரிக்கப்படும் கைகள், அதாவது அபிநயா என்னும் குழந்தைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, செயற்கை கால்கள் வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டு குழந்தைக்கு பொறுத்தப்பட்டது. அப்படி ஏதாவது செய்யலாமா என்று சிறுவன் கீர்த்தி வர்மாவிடம் கேட்டபோது அவர் உடனடியாக மறுத்து எனக்கு செயற்கை கைகள் தேவையில்லை, உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சை என்கின்ற வகையில் கை உறுப்பு மாற்று அறுவை கிசிச்சை செய்து எனக்கு ஒரிஜினல் கைகளை பொறுத்துவதற்கு இந்த அரசு செய்தால் நன்றாக இருக்கும் என்கின்ற வகையிலான விருப்பத்தை தெரிவித்தார். உடனடியாக சென்னைக்கு அவரையும், அவருடைய தாயாரையும் வரவழைத்து இருக்கிறோம். இன்றைக்கு உறுப்புமாற்று ஆணையத்தின் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன் அவர்கள் வந்திருக்கிறார். சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை என்பது உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு புகழ்பெற்ற மருத்துவமனையாகும். தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் ஸ்டான்லி மருத்துவமனையில் தான் கை மாற்று அறுவை சிகிச்சை என்பது ஏறத்தாழ 2018 ஆம் ஆண்டு முதல் செய்யப்பட்டு வருகிறது. தனியார் மருத்துவமனைகள் என்று எடுத்துக் கொண்டால் ஒரு சிறந்த மருத்துவர் குளோபல் மருத்துவமனையில் இருக்கின்றார், அங்கு செய்யப்படுகிறது. இதுவரை

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 2018க்கு பிறகு 8 பேருக்கு கைமாற்று அறுவை சிகிச்சை செய்து அவர்கள் நன்றாக இருக்கிறார்கள். இந்நிலையில் 26 பேர் உறுப்பு மாற்று ஆணையத்திடம் கைகள் வேண்டி பதிவு செய்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில்தான் பெருமதிப்பிற்குரிய கீர்த்திவர்மா என்கின்ற சிறுவனின் கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் இன்று அவருடைய பெயர் அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உறுப்பு மாற்று ஆணையத்திடம் பதிவு செய்யப்படுகிறது. பதிவு செய்து இரண்டு நாட்கள் கழித்து திங்கட்கிழமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இரண்டு நாட்கள் அவருக்கான பல்வேறு பரிசோதனைகள் செய்யப்பட உள்ளது. பரிசோதனைகளை தொடர்ந்து அவர் டிஸ்சார்ஜ் செய்யப்படுவார். மூளைச்சாவு அடைபவர்களிடம் கை உறுப்பு தானம் கிடைக்கப்பெற்றவுடன் சிறுவனுக்கு உடனடியாக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படவிருக்கிறது. மருத்துவர்களிடத்தில் தற்போது பேசியபோது, யாராவது மூளைச்சாவு அடைந்தவர்களிடத்தில் உறுப்பு பெற்று 6 மணி நேரத்திற்குள் அறுவை கிசிச்சை செய்தால் மட்டுமே, கைகள் இயங்கும் தன்மை உடையதாக இருக்கும் என்கின்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இவர் இங்கே பதிவு செய்துவிட்டு, கிருஷ்ணகிரியில் இருந்தால் அங்கிருந்து இவர் சென்னை வந்து, கைகள் தானமாக பெற்று, மருத்துவமனைக்கு செல்வது என்பது 6 மணி நேரத்திற்குள் செல்வது என்பது இயலாத காரியம் ஆகும். எனவே அவரிடத்திலும் அவரது தாயாரிடம் தற்போது பேசியிருக்கிறோம். இவருடைய எதிர்கால கனவு என்பது பொறியியல் படிக்க வேண்டும் என்பது. பொறியியல் படிப்பதற்கு சென்னையை ஒட்டி, ஏதாவது ஒரு கல்லூரியில் விடுதியில் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்தி தரும். நீங்கள் இங்கேயே படிப்பீர்களா என்கின்ற விருப்பத்தை கேட்டோம். அவரும் அதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்நிலையில் அவருடைய பொறியியல் படிப்பு படிப்பதற்குரிய 4 ஆண்டுகால செலவையும் ஆனந்தம் அறக்கட்டளை என்னும் அமைப்பை மரியாதைக்குரிய திரு.செல்வக்குமார் என்பவர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 12 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் கிராமத்தில் பயில்கின்ற மாணவர்கள், பெற்றோரை இழந்த மாணவர்கள் என இந்த ஆனந்தம் அறக்கட்டளை 984 பேருக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பதற்கு இலவசமாக படிக்க வைத்துக் கொண்டிருக்கிறது இந்த ஆனந்தம் அறக்கட்டளை. அந்த அமைப்பின் நிர்வாகியையும் இங்கு வரவழைத்துள்ளோம். அவரிடத்தில் கேட்டப்போது அவர் இந்த மாணவரை தத்தெடுத்துக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார். எனவே இந்த மாணவன் சென்னையில் உள்ள பொறியியல் கல்லூரியில் சேர்க்கப்பட்டு,

பொருட்செலவை ஆனந்தம் அறக்கட்டளை ஏற்றுக்கொள்ளவிருக்கிறது. இவர் சென்னையில் படித்தால் தான் மருத்துவத்திற்கும் மிகவும் வசதியாக இருக்கும். இந்த மாணவரும் 2 நாட்கள் கழித்து சென்னைக்கு வருவதாக கூறியுள்ளார். திங்கட்கிழமை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்படவிருக்கிறார். அந்தவகையில் சிறுவன் கீர்த்திவர்மா இன்று உறுப்பு மாற்று ஆணையத்தில் கை உறுப்பு வேண்டி பதிவு செய்ய வந்துள்ளார்.

***சிறப்பு சிகிச்சை வழங்கி குணமடைந்தவர்கள்***

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுபோன்ற குழந்தைகளின் எதிர்பார்ப்பை இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தென்காசியை சேர்ந்த இசக்கியம்மாள் எனும் குழந்தை காப்பாற்றப்பட்டு 3 மாதங்கள் சென்னையில் தங்க வைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அந்த குழந்தையின் பெற்றோருக்கு ரூ.5 இலட்சம் உதவித்தொகை தந்திருக்கிறார்கள். அதே போல் அபிநயா எனும் 2 கால்களையும் இழந்த பெண் குழந்தைக்கு வெளிநாட்டில் இருந்து செயற்கை கால்களை பெறப்பட்டு அவரும் தற்போது நன்றாக இருக்கிறார். அதேபோல் தருமபுரியை சேர்ந்த சிறுவனின் பெற்றோர்கள் மாவட்ட ஆட்சியரிடம் தீக்காயத்தினால் உடல் முழுவதும் பாதிக்கப்பட்ட அந்த குழந்தையை கருணை கொலை செய்ய சொல்லி வேண்டியிருந்தனர். உடனடியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அந்த குழந்தையை சென்னை அழைத்து வந்து 3 மாதகாலம் இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதித்து, 8 அறுவை சிகிச்சைகள் மேற்கொண்டு தற்போது நன்றாக வீடு திரும்பியிருக்கிறார். இப்படி ஏராளமான குழந்தைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மனிதநேயத்தோடு, கருணையுள்ளத்தோடு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

***உடலுறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை***

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2023 செப்டம்பர் திங்கள் 23 ஆம் தேதி ஒரு சிறப்பு மிக்க அறிவிப்பு ஒன்று வெளியிட்டார்கள். அந்த அறிவிப்பின்படி மூளைச்சாவு அடைந்தவர்களுக்கு அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்னும் மகத்தான திட்டத்தை உலகிலேயே முதன்முதலாக முன்னெடுத்தது தமிழ்நாடு. அதன் காரணமாக கடந்த ஓராண்டில் 2023 செப்டம்பர் 23க்குப் பிறகு 418 பேர் உடலுறுப்பு தானம் செய்திருக்கிறார்கள். உலக அளவில் உடலுறுப்பு தானம் செய்திருப்பது தமிழ்நாட்டில் தான் அதிகம். இதனையெல்லாம் இந்த சிறுவன் அறிந்துக் கொண்டிருந்த காரணத்தினால்தான் உடலுறுப்பு தானம் பற்றிய விழிப்புணர்வு அவர் பெற்றிருந்த காரணத்தினால்தான் உடலுறுப்பு தானம்

சரி செய்துக் கொள்ளலாம் என்கின்ற எண்ணம் அவருக்கு வந்திருக்கிறது. இதனால் அவரை நாங்கள் பாராட்டுகிறோம் என்று மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் உடல் உறுப்பு மாற்று ஆணையம் உறுப்பினர் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன், சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி முதல்வர் (பொ) மரு.மகேஷ், கிருஷ்ணகிரி மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ரமேஷ்குமார், அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி, கை புனராழ்வு மற்றும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத்துறை பேராசிரியர் மரு.நெல்லையப்பர், மயக்கவியல் துறை பேராசிரியர் மரு.கார்த்திக், நரம்பியல் துறை பேராசிரியர் மரு.வேலுச்சாமி, எலும்பியல் துறை பேராசிரியர் மரு.மோகன்குமார், புனராழ்வு மற்றும் உடல்நலம் மருத்துவம் பேராசிரியர் மரு.பிரியதர்ஷினி மற்றும் மருத்துவக்குழுவினர் உடனிருந்தனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu